


# “அறிவாலயம் தமிழ்நாட்டின் காவல் அரண்!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க. 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் பத்தாவது அமர்வில், ‘திராவிட அடையாளத்தில் தமிழர் அரசியல்’ என்ற தலைப்பில், தந்தை பெரியார் திராவிடர் கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் சீனி.விடுதலை அரசு அவர்கள் ஆற்றிய உரை :**



## சீனி.விடுதலை அரசு

**தந்தை பெரியார் திராவிடர் கழகக் கொள்கை பரப்புச் செயலாளர்**



“ஒரு இனம், ஒரு சமூகம் தன்னுடைய அரசியல் அதிகாரத்தை நோக்கி நகரும்போது, தனக்கான அடையாளத்தைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும். தனக்கு எது அடையாளம் என்பதைத் தேர்ந்தெடுத்துக் கொண்டால்தான், அந்த இனம் தனக்கான அதிகார அரசியலை நோக்கி, நகர முடியும்.

அந்த வகையில், இன்றைக்கு இந்தியாவின் அரசியலில் இரண்டு அடையாளங்கள் மோதுகின்றன. ஒன்று தேசிய அடையாளத்துடன் வருகின்ற சனாதன அரசியல். இன்னொன்று திராவிட அடையாளத்துடன்கூடிய தமிழர் அரசியல். திராவிட அடையாளத்துடன் இருக்கிற தமிழர் அரசியலைக் கண்டு, ஒட்டுமொத்த தேசிய அடையாளத்துடன் இருக்கிற சனாதன அரசியல் அஞ்சுகிறது.

### சித்தாந்த ரீதியிலான எதிரிகள்

பீகார், உத்தரப் பிரதேசத்தில், தேர்தல் பிரச்சாரத்துக்குச் சென்ற பிரதமர் மோடி பேசுகிறார். ‘இங்கே இருக்கிறவர்கள் யாருடன் கூட்டணி வைத்திருக்கிறார்கள் தெரியுமா? தி.மு.க.வோடு. தி.மு.க. என்ன மாதிரி கட்சி என்று தெரியுமா?’ என்று நம் கொள்கையை அவர் பேசிக்கொண்டிருக்கிறார். ஒரு மாநிலக் கட்சியாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தை, இந்தியாவின் தேசிய அரசியலுக்குக் கொண்டு வந்து, தங்களுக்கான எதிரிகளாக அவர்கள் முன்வைக்கிறார்கள். அவர்கள் நினைப்பது மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்திய அரசியலின் போக்கும் இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சுற்றிச் சுழன்று கொண்டிருப்பதற்கு, என்ன காரணம் என்றால், பாரதிய ஜனதா கட்சி என்கிற அந்தச் சனாதன வெறி பிடித்த கும்பலுக்கு சித்தாந்த ரீதியிலான எதிரிகள் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதால்தான்.

அறிவாலயம் என்பது திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற ஓர் அரசியல் கட்சிக்கான தலைமை அலுவலகம் மட்டுமல்ல, தமிழ்நாட்டின் காவல் அரண். அறிவாலயம் வீழ்ந்தால், தமிழ்நாடு வீழும். அதனால்தான் தமிழ்நாட்டின் காவல் அரணையே, அரணாகக் காக்கும் பொறுப்பைப் பெரியாரியர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இடதுசாரிகள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அம்பேத்கரியச் சிந்தனையாளர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் முதல்வர் சொல்கிறார், ‘கருப்பும் சிவப்பும், நீலமும் சேர்ந்ததற்குப் பிறகு, இந்தத் தமிழ்நாட்டில் காவிகள் எவரும் கால் ஊன்ற முடியாது’ என்று.

### வாய்மையே வெல்லும்

‘சத்யமேவ ஜெயதே’ என்கிற வார்த்தைகளை ‘வாய்மையே வெல்லும்’ என்று மாற்றுவதற்கு இந்த நாடு 1967 வரை காத்துக்கொண்டிருந்தது. தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம் என்று தமிழில் எழுதுவதற்கும், அந்தத் தலைமைச் செயலகத்துக்குள் திருவள்ளுவர் படத்தைத் திறந்து வைப்பதற்கும், அழகுத் தமிழில் அரசின் நலத்திட்டங்களுக்குப் பெயர் சூட்டுவதற்கும், இந்தத் தமிழ்நாட்டுக்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டுவதற்கும், 1967 வரை வரலாறு காத்துக்கொண்டிருந்தது.

அது மட்டுமல்ல, அந்த 1967-இல் பேரறிஞர் பெருந்தகை அண்ணா ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, சுயமரியாதைத் திருமணச் சட்டத்தைக் கொண்டு வந்தார். இது இப்போது கேட்பதற்கு மிகவும் எளிமையாக இருக்கும். ஒரு திருமணத்தை அய்யர் இல்லாமல் செய்துகொள்வதில் என்ன பெரிய புரட்சி என்று? இரண்டே இரண்டு வரலாற்றுச் செய்தியைச் சொல்லி முடிக்கிறேன்.

### சமூக அநீதி

‘சித்தூர் அதாலத்துக் கோர்ட் தீர்ப்பு’ என்று ஒரு புத்தகம் இருக்கிறது. அந்த வழக்கு என்னவென்றால், 1818-ஆம் ஆண்டு இன்றைய வேலூர் மாவட்டம், சதுப்பேரி கிராமத்தில் ஒரு வீட்டில் திருமணம் செய்வதற்கு முகூர்த்தக்கால் நடுகிறார்கள். அந்த வீட்டுக்குச் சொந்தக்காரர் பெயர் மார்க்க சகாயம் ஆச்சாரி. அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பஞ்சாங்கம் குண்டையர் என்பவர் அக்ரஹாரத்திலிருந்து 50 பேரைத் திரட்டிக்கொண்டு வந்து முகூர்த்தக் கால் நடவிடாமல் தடுக்கிறார். இரண்டு தரப்புக்கும் அடிதடி வரைக்கும் போகிறது. பஞ்சாங்கம் குண்டையர் ‘பிராமணன் இல்லாமல் எப்படி நீ முகூர்த்தக்கால் நடுவாய்? பிராமணன் இல்லாமல், எப்படி நீ உன் வீட்டில் திருமணம் செய்யலாம்? சட்டப்படி தவறு’ என்கிறார்.

பஞ்சாயத்து கூடுகிறது. இரண்டு பேருக்கும் விவாதம் நடக்கிறது. மார்க்க சகாய ஆச்சாரி, “இது எங்களுடைய குலவழக்கப்படி நாங்கள் நடத்திக்கொள்வது. நாங்கள் பிராமணர்களை அழைக்கவேண்டும் என்கிற அவசியம் இல்லை. நாங்களே விஸ்வகுலப் பிராமணர்கள்” என்கிறார்.

பஞ்சாயத்தில், “மார்க்க சகாய ஆச்சாரி செய்வது சரிதான்” என்கிற தீர்ப்பு வருகிறது. இருந்தாலும், பஞ்சாங்கம் குண்டையர் விடவில்லை. “நீ எதை வேண்டுமானாலும் நடத்திக்கொள். ஆனால், எனக்குக் கொடுக்க வேண்டிய தட்சணையைக் கொடுத்துவிட்டு நடத்து. அது என் உரிமை” என்கிறார்.

சித்தூர் ஜில்லா கோர்ட்டுக்கு இந்த வழக்கு போகிறது. டேக்கர் துரை என்கிற நீதிபதி இந்த வழக்கை விசாரித்து, “இவர்கள் திருமணம் தாங்களாகவே நடத்திக்கொள்வதற்கு உரிமை உண்டு” என்று தீர்ப்பளிக்கிறார். நன்றாகக் கவனியுங்கள். ‘விஸ்வகுலப் பிராமணர்கள் தங்கள் சமூகத்தில் தாங்களாகவே திருமணம் நடத்திக்கொள்வதற்கு உரிமை உண்டு’ என்று தீர்ப்பு பெற்றார்களே தவிர, அந்தத் தீர்ப்பும் பல ஆண்டுகளாக நடைமுறைக்கு வரவில்லை. மேலும், இந்த தீர்ப்பு அவர்களுக்கு மட்டும்தான் பொருந்துமே தவிர, மற்ற எல்லாச் சமூக மக்களுக்கும் அந்த உரிமை கிடையாது.

### சுயமரியாதைத் திருமணச் சட்டம்

இதை மாற்றுவதற்கு ஓர் இயக்கம் 150 ஆண்டுகளுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தது. 1818 எங்கே இருக்கிறது, 1968 எங்கே இருக்கிறது? பேரறிஞர் பெருந்தகை அண்ணா, இந்த இனத்தின் சுயமரியாதையை மீட்டுத் தந்த பகுத்தறிவுத் தலைவன், தந்தை பெரியாரின் தலைமகன். அவர் சுயமரியாதைத் திருமணச் சட்டம் கொண்டு வந்ததற்குப் பிறகுதான் சட்டப்படி நாம் அய்யர் இல்லாமல் திருமணம் செய்யலாம் என்ற நிலை வந்தது.

இன்னொரு செய்தியைச் சொல்கிறேன். கவனமாகக் கேளுங்கள். 1871, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அதிகாரியாக இருந்தவர் டபிள்யூ. ஆர்.கார்னிஸ். ‘இந்து சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட பிரிவினரே, அரசுப் பதவிகள் அத்தனையிலும் நீக்கமற நிறைந்திருக்கிறார்கள். இது தவிர்க்கப்பட வேண்டும். இந்து சமூகத்தின் இதர குடிமக்களும், இஸ்லாமியர்களும் அரசு நிர்வாகத்தில் பங்குபெற இங்கே இருக்கக்கூடிய பிரிட்டிஷ் அரசு, முயற்சி எடுக்க வேண்டும்’ என்று 1871-இல் அவர் குறிப்பு எழுதினார்.

1871-இல் டபிள்யூ.ஆர்.கார்னிஸ் என்கிற வெள்ளைக்கார அதிகாரி அரசு நிர்வாகத்தில் அனைத்துத் தரப்பினரும் பங்களிக்க வேண்டும் என்று சொன்னதை நூறாண்டு கழித்துச் செயல்படுத்திய மகத்தான தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர். 1971-இல் தான் அரசுப் பதவிகள் அனைத்திலும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகத்து மக்கள் நீக்கமற நிறைந்தார்கள். இவ்வளவு சாதனைகளையும் செய்த இந்த இயக்கம், ஏன், திராவிட அடையாளத்துடன் செய்ய வேண்டும்? இதைத் தமிழர் என்றோ செய்திருக்கலாமே? எதற்காகத் திராவிடம்? இப்போது சிலர் இதைத்தானே கேட்கிறார்கள்?

### ‘திராவிடம்’ என்கிற அடையாளம்

இந்த நாட்டில் இந்திய அளவில் எத்தனையோ கட்சிகள் இருக்கின்றன. அந்தக் கட்சிகள் எல்லாம் என்ன பெயர் வைத்திருக்கின்றன என்று கவனித்துப் பாருங்கள். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், அகில இந்திய ஃபார்வர்ட் பிளாக். இவையெல்லாம் ‘இந்திய’ என்ற அடையாளத்துடன் கட்சிகளை நடத்தும்போது ஒரு கட்சி மட்டும் ‘பாரதிய ஜனதா கட்சி’ என்று பெயர் வைத்திருக்கிறது ஏன்? தங்கள் மாணவர் அமைப்புக்கு ஏன் ‘அகில பாரத வித்தியார்த்தி பரிசத்’ என்ற பெயரை வைத்திருக்கிறது? இந்தியா என்பதைவிட ‘பாரதம்’ என்கிற பெயர் அவர்களுடைய நோக்கத்தை, அவர்களுடைய வர்ணாசிரம சனாதன தர்மத்தின் உள்ளக் கிடக்கையைத் தெளிவாக விளக்குகிறது. எனவே, இந்தியா என்பதைவிட அவர்களுக்கு ‘பாரதம்’ என்கிற பெயர் மிக முக்கியமாகப் படுகிறது. அதைப்போலதான் எங்களுக்குத் ‘தமிழர்’ என்பது, எங்கள் வாழ்வியல் நெறியாக இருந்தாலும், தமிழர், தமிழ்நாடு, தமிழர் நலன் என்பதற்காக நாங்கள் இயங்கினாலும், ‘திராவிடம்’ என்கிற அடையாளம் எங்களை உயர்த்துகிறது. திராவிடம் என்கிற அடையாளம் சுயமரியாதையைக் கொடுக்கிறது. திராவிடம் என்கிற அடையாளம் இந்திய சனாதன வேத வைதீக மரபை எதிர்த்துக் களத்தில் நிற்கிறது.” ●

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**அறிவுத் திருவிழாவின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘முற்போக்கு புத்தகக்காட்சி’யில் ஒவ்வொரு பதிப்பகத்திலும் அதிகம் விற்பனையான நூல்கள் :**












இறையகம் :
**தமிழோசை தமிழாரம்**

சிந்தன் புக்ஸ் :
**உழைக்கும் பெண்களுக்கு...**

நிகர்மொழி பதிப்பகம் :
**இந்தியாவில் சமூகநீதியும் இடஒதுக்கீடும்**

திருநங்கை பதிப்பகம் :
**பஸ்தி**